# தென்பகுதி போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டம் - 2012

## 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான கட்டுநிதி நிதியக் கணக்குகளிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகள் அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான படிமுறைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 10,555,355,748 ஆனதுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 85,439,740,790 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பனவற்றின் பொழிப்பொன்றை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| செலவின வகை | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2012 | 2011 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | (4,119,579)* | (4,075,291) | 20,451,516 |
| நடைபெறும் வேலைகள் | 10,559,475,327 | 8,662,278,607 | 85,419,289,274 |
| | 10,555,355,748 | 8,658,203,316 | 85,439,740,790 |

* சொத்துக்களின் பெறுமானத்தேய்வு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மாற்றப்பட்ட சொத்துக்கள் காரணமாக.

### 2.2 கட்டுநிதி நிதியக் கணக்குகள்

2011 இல் கொட்டாவையிலிருந்து பின்னடுவ வரையான பகுதி பூர்த்தியாக்கப்பட்ட போதிலும், சில கொடுக்கல் வாங்கல்கள் மீளாய்வாண்டின் போதும் இறுதியாக்கப்பட்டு வந்திருந்தன.

நிதிக்கூற்றுக்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கட்டுநிதி நிதியக் கணக்குகளின் செயற்பாடுகள் கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| | ஆசிய அபிவிருத்தி வங்கி | | நோர்டிக் அபிவிருத்தி நிதியம் (என்டிஎவ்) | |
|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் | இல ரூபா | ஐ.அ.டொலர் | இல ரூபா |
| 2012 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 1,749 | 199,264 | 2,834 | 269,454 |
| கூட்டு:- மீள் நிரப்பல்கள் | 680,432 | 80,346,295 | இல்லை | இல்லை |
| வெளிநாட்டுநாணயமாற்று இலாபம் | - | 1,926,811 | - | இல்லை |
| | 682,181 | 82,472,370 | | 269,454 |
| கழி: பற்றுதல்கள் | 604,511 | 72,595,777 | இல்லை | இல்லை |
| 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 77,670 | 9,876,593 | 2,834 | 269,454 |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றம்

ரூபா 1,956 மில்லியன் தொகையான எல்ஏஅர்சீ இழப்பீடு (காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்ற இழப்பீடு) மற்றும் ரூபா 363 மில்லியன் தொகையான இழப்பீட்டுக் கொடுப்பனவு தாமதப்பட்டமைக்கான வட்டி என்பவற்றைக் கொண்ட சட்டரீதியான இழப்பீடாக கருதும் ரூபா 2,422 மில்லியன் தொகை பாதிக்கப்பட்ட தரப்பினரிற்கு செலுத்தப்பட்டிருந்தது.

நெடுஞ்சாலைகள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 2006/09/08 ஆந் திகதிய எம்எச்/டபிள்யூ/1/93 ஆம் இலக்க சுற்றறிக்கையின்படி, காணி உடமையாளர்களின் வேண்டுகை அடிப்படையில் காணி சுவீகரிக்கும் போது, காணிப் பெறுமதி மதிப்பீடு, காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள் குடியேற்ற குழு நடைமுறைகள் மீது 25 சதவீத மிகையூதியம் பெறுவதற்கு காணி உடமையாளர்கள் தகுதியற்றிருந்தனர். இதற்கு முரணாக, அவர்களுடைய வேண்டுகையில் காணி சுவீகரிக்கப்பட்டிருந்த மூன்று காணி உடமையாளர்களிற்கு மிகையூதியமாக ரூபா 624,950 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3.2 பொது நிர்வாகம்

### 3.2.1 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது எய்தப்படவேண்டிய இலக்குகளுடன் பிரதான பதவியணியினருக்கான பொறுப்புக்களை தெளிவாக இனங்காட்டக்கூடிய வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே செயற்திட்டத்தின் அமைக்கப்பட்ட நோக்கங்களை எய்தும் நோக்கில் சரியான அளவீடுகளை எடுப்பதற்கும் முக்கியமான மாற்றங்களைச் செய்வதற்குமாக ஒட்டுமொத்த முன்னேற்றத்தை முறைப்படி மதிப்பாய்வு செய்ய முடியாதிருந்தது.

(ஆ) பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் செயற்திட்டத்தின் பதவியணி அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், நான்கு உள்நாட்டு ஆலோசனையாளர்கள் உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது வேதனங்களாக ரூபா 2,996,075 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 3.2.2 ஒப்பந்த நிர்வாகம்

(அ) குறுந்துக்ககெரெக்ம முதல் பின்னடுவ வரையான ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியளிக்கப்பட்ட பிரிவில் பொலீஸ் வாகனங்களிற்காக தரிப்பிட பகுதி நிர்மாணம் ரூபா 10,601,637 இற்கு தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. இது ரெதடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிகளின் 4.3.1(ஏ) ஆம் பிரிவின்படி, பொறியியல் கிரய மதிப்பீடுகள் சிவில் வேலைகள் தொடங்குவதற்கு முன்னர் தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், பொறியியல் கிரய மதிப்பீடுகள் தயாரிக்காமல் ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரிவில் பொலீஸ் வாகனங்களிற்கான தரிப்பிட பகுதி நிர்மாணத்திற்கான ஒப்பந்தகாரருக்கு ரூபா 11,873,833.81 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிகளின் 4.3.1(சீ) ஆம் பிரிவின்படி, மதிப்பீடுகளில் 10ச தவீத பௌதீக நிகழத்தக்கவைகளிற்காக ஏற்பாடு செய்யப்பட வேண்டும். மேற்குறிப்பிட்ட வேண்டுகையை அலட்சியப்படுத்தி செயற்திட்டத்தால் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் பொலீஸ் வாகனங்களிற்கான தரிப்பிட பகுதி நிர்மாண ஒப்பந்தம் தொடர்பில் முரண்பாடாக 26 சதவீதத்திற்கு சமமான ரூபா 2,493,834 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iii) பொலீஸ் வாகனங்களிற்கான தரிப்பிட பகுதி நிர்மாணத்திற்கான கேள்வி ஆவணங்களை மதிப்பாய்வு செய்யாமல் ரூபா 8,375,000 ஒப்பந்த விலையில் ஒப்பந்தகாரருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டதுடன் செய்யப்பட்ட வேலைகள் அளவீடு பெறப்படாமல் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) செயற்திட்டத்தால் கொட்டாவையிலிருந்து பின்னடுவ வரையான வீதிப் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகள் சிலவற்றிற்காக ரூபா 5,321,436 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உரிய கிரய மதிப்பீடுகள் மற்றும் அனுமதித்த நிதி ஏற்பாடுகள் என்பன கணக்காய்விற்காக கிடைத்திருக்கவில்லை.

### 3.2.3 விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொதி 1 இலிலுள்ள ஒப்பந்த நிபந்தனை விபரங்களின் 14.2 ஆம் பிரிவின்படி, ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்த தொகையின் 20 சதவீதம் மாத்திரமே முற்பணமாக செலுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், கொள்வனவு வழிகாட்டல் நடைமுறைகளின் மேற்குறிப்பிட்ட வேண்டுகையுடன் இணங்காமல் ஐபிசீ-இல. 14 இல் ரூபா 522,272,250 தொகையான மேலதிகமான முற்பணக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவிற்கு முரணாக, 2012 சனவரி முதல் ஒக்தோபர் வரை மேந்தலைச் செலவினமாக செயற்திட்டத்தால் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 1,961,127 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 4. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 நிதிசார் செயலாற்றல்

(அ) விலைப்பட்டியல்களை தீர்ப்பதற்காக, மீளாய்வாண்டின் போது ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ரூபா 1,119,005,069 தொகை பெறப்பட்டிருந்தது.

(ஆ) பின்னடுவ முதல் கொடகம வரையான பிரிவு தொடர்பில் எக்சிம் வங்கியிடமிருந்து ரூபா 18.7 பில்லியன் தொகையான நிதிகள் பெறப்பட்டிருந்தது. விபரங்கள் பின்வருமாறுள்ளன.

| **பொதி** | **மூல ஒப்பந்த விலை** | **2012 திசெம்பர் 31 வரை திரண்டவை** | |
|---|---|---|---|
| | | **இலக்கு** | **உள்ளபடி யானது** |
| | (ரூபா மில்) | (ரூபா மில்) | (ரூபா மில்) |
| பொதி I (பின்னடுவ முதல் கொடகொட வரை) | 10,170 | 4,026.66 | 1,953.75 |
| பொதி II (கொடகொட முதல் கொடகம வரை) | 8,530 | 3,873.11 | 2,642.76 |

### 4.2 பௌதீக செயலாற்றல்

கொட்டாவை முதல் பின்னடுவ வரையுள்ள 95.05 கிமீ பிரிவு மற்றும் காலித்துறைமுக நுழைவு வீதி என்பன பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் 2011 நவம்பர் 27 இல் போக்குவரத்திற்கு திறக்கப்பட்டது.

பின்னடுவை முதல் கொடகம வரையான (30 கிமீ) மிகுதிப்பகுதி நிர்மாணத்தின் கீழ் உள்ளது. மிகுதிப் பகுதியின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக செயலாற்றல் கீழ்வருமாறிருந்தது.

| **பொதி** | **இலக்கு** | **உள்ளபடி யானது** | **விலகல்** |
|---|---|---|---|
| பொதி I (பின்னடுவ முதல் கொடகொட வரை) | 47.76 % | 26.11 % | - 21.65% |
| பொதி II (கொடகொட முதல் கொடகம வரை) | 48.00 % | 37.64 % | - 10.36% |